249—

தரைப்பாலம் கட்டுதல்.

*3327—திரு. ஆர். டி. அரங்கநாதன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

விருத்தாசலம் தொகுதியில் மணிமுத்தா ஆற்றின் குறுக்கே எருமனூர் கிராமத்தை இணைத்து, அதைச்சார்ந்த சுமார் 30 கிராமங்கள் பயனடையும் வகையில் ஏற்கெனவே திட்டமிடப் பட்ட தரைப்பாலம் கட்டுவதின் தற்போலதைய நிலை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை பணியை எடுத்து கொள்ள வேண்டுமென்று மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப் பட்டு, இது மத்திய சாலை நிதி திட்டத்தின் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. மைய அரசுடைய ஒப்புதல் எதிர்பார்க்கப்படு கிறது. மத்திய அரசினுடைய ஒப்புதல் கிடைத்த உடனேயே அந்த வேலை தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கி றேன்.

திரு. ஆர். டி. அரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்திருப்பதாக இங்கே அறிவித்தார்கள், இன்றைய தினம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொன்னான ஆட்சியில் கிராமங்கள் எல்லாம் நகரத் திற்கு சமமாக முன்னேற வேண்டுமென்ற சீரிய நோக்கத்தில் செயல்படுகிற இந்த நேரத்திலே என்னுடைய தொகுதியான விருத்தாசலத்தில் மணிமுத்தா நதியின் குறுக்கே தரைப்பாலம் கட்டித்தந்தால், சுமார் 30 கிராம மக்கள் தங்களின் விவசாய விளைபொருள்களை நகரத்திற்கு கொண்டு வந்து விற்பனை செய்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு ஏதுவாக இருக்கும். இதை வலியுறுத்தி பல ஆண்டுக்காலமாக அந்த 30 கிராம மக்களும் போராட்டங்களும். உண்ணாவிரதங்களும் நடத்தினார்கள், எனவே அந்த கிராம மக்களின் வயிற்றில் பாலை வார்க்கின்ற வகையில் விரைவில் எருமனூர் தரைப்பாலத் தைக் கட்டித் தந்து தாயுள்ளம் கொண்ட டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு அந்த கிராம மக்களுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துதலைப் பெறுகின்ற வகையில் இந் ஆண்டிலேயே அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற அந்தப் பாலம் மணிமுத்தா ஆற்றின் குறுக்கே

1992 மார்ச் 17]

கட்டப்பட வேண்டியது. அந்த ஆற்று நீர்வழி பாலதயினுடைய அகலம் ஏறத்தாழ 300 மீட்டர் ஆகும். இதற்காக மதிப்பீடு சுமார் 1 கோடி ரூபாய் அளவிலே தயாரிக்கப்பட்டு, நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே முயற்சிகளை மேற்கொண்டு அந்தப் பகுதியினுடைய மக்களுடைய கஷ்டங்களை உணர்ந்து அதை உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்று சென்ட்ரல் ரோடு ஃபண்டு ஸ்கீம் என்ற அந்த அளவிலே, அந்தத் திட்டத்திலே சேர்த்து அனுப்பியிருக்கிறோம். ஆகவே விரைவில் ஒப்புதல் கிடைக்கும் எனறு எதிர்பார்க்கின்றோம். வந்த உடனேயே அந்தப் பணிகள் தொடங்கப்பட்டு அந்த மக்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிந்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 250. திருமதி கே. எம். கலைச்செல்வி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

250—

புனர்ஜென்ம மூலை என்ற நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம்.

*4010—திருமதி கே. எம். கலைச்செல்வி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடி தொகுதி, கே. வி. குப்பம் ஒன்றியம், காங்குப்பம் ஊராட்சியில் புனர்ஜென்ம மூலை என்ற நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காட்பாடி தொகுதி, கே. வி. குப்பம் ஒன்றியம், காங்குப்பம் ஊராட்சியில் ''புனர்ஜென்ம மூலை'' என்ற நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், குடியாத்தம் வட்டத்தில் காங்குப்பம் கிராமத்தில் மகாதேவ மலையின் அருகே புனர்ஜென்மம் ஓடையின் குறுக்கே குட்டை மட்டும் அமைக்கின்ற திட்டம் ஒன்று பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரின் ஒத்திசைவு எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் நில நிர்வாக ஆணையரின் பரிந்துரையும் தேவைப்படுகிறது. எனவே, இது சம்பந்தமாக பொதுப் பணித்துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு தொடர்பு கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.